வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 66/2020

வழக்கு சாட்சி  LW3/PW1

| பெயர் | ஸ்டாலின் சந்திரசேகர், சிறப்பு உதவி ஆய்வாளர் | ஜாதி | |
|---|---|---|---|
| கணவர்/தந்தை | கண்ணையன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 49 |

தேதி 20.08.2026.

எதிரிகள் ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல்  விசாரணை**

நான் தற்போது காவல்துறை ஒருங்கிணைந்த திட்டமிட்ட குற்ற நுண்ணறிவு பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2016 ம் ஆண்டு நான் பால்பண்ணை காவல்நிலைய குற்ற பிரிவில் தலைமை காவலராக  பணிபுரிந்து வந்தேன. 26.02.2016 சரக உதவி காவல் ஆணையாளர் உத்தரவின் பேரில் சிறப்பு உதவி ஆய்வாளர் குமார் தலைமையில், சிறப்பு உதவி ஆய்வாளர் பாக்கியராஜ் மற்றும் நான், என்னுடைன் முதல் நிலை காவலர் பாலு அனைவரும் சேர்ந்து  தடை செய்யப்பட்ட லாட்டிரி சீட்டை விற்பனையினை பொருத்து  கிடைக்கப்ப்பெற்ற ரகசிய தகவலினைப் பெற்று  மாதவரம் CMDA  லாரி நிறுத்தும் இடம் இருந்து தொடர்ந்து கண்காணித்து வந்தோம். அவ்வாறு வந்த போது மாதவரம் மேம்பாலத்திற்கு அருகில் உள்ள சர்வீஸ் சாலையில் எண். 11/32, தூரக்கடை  மாதவரம்  ரோட்டில் இருந்த 2வது கட்டிடத்தில் உள்ள மாடியில் சந்தேகப்படும் படிஆட்கள் நடமாட்டம்

தென்பட்டது. மேலே சென்று ஆய்வு செய்த போது தடை செய்யப்பட்ட லாட்டிரியானது விற்பனை செய்யப்படுவது தெரியவந்த்து. அங்கிருந்த நபர்கள் ஒரு துண்டு சீட்டில் எண்களை எழுதி கொடுத்துக் கொண்டு இருந்தார்கள். அங்கு சுமார் 12 நபர்கள் இருந்தார்கள். உடனடியாக நாங்கள் அங்கிருந்த நபர்களை சோதனையிட்டோம். அங்கிருந்த மதியழகன் என்ற நபரிடன் ரூ. 5,300 ரொக்க பணம் இருந்தது. கேட்ட போது லாட்டரி விற்பனை செய்து வந்த பணம் என்று கூறினார். துண்டு சீட்டு அவர் வைத்திருந்த்தையும், லாட்டரி விற்பனைக்கு வைத்திருந்த செல்போனையும் ஒரு கம்பியூட்டர் மற்றும் பில் புக்கினை அவரிடம் இருந்து சாட்சிகள் முன்னிலையில் மகஜர் மூலம் கைப்பற்றினோம். தனி நபர் சாட்சிகள் யாரும் கையொப்பமிட முன்வராத்தால் நாங்களே சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தோம். அங்கிருந்த 12 நபர்களை தடய பொருட்களுடன் கைது செய்து அருகில் இருந்த மாதவரம் சட்டம் ஒழுங்கு காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். சிறப்பு உதவி ஆய்வாளர் குமார் தனிப் புகார் ஆய்வாளரிடம் அளித்தார். பின்னர் சம்பவம் குறித்து ஆய்வாளர் என்னிடம் விசாரணைச் செய்தார்.

**குறுக்கு விசாரணை**

யார் தலைமையில் ஆய்வு செய்தோம் என்றால் சிறப்பு உதவி ஆய்வாளர் குமார். மேற்படி ஆய்வு குறித்து என்னுடைய தனிப்பட்ட கை நாட்குறிப்பில் எழுதி வைத்துள்ளேனா என்றால் எழுதி வைத்துள்ளேன். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன். பொது நாட்குறிப்பில் பதிவுச் செய்துள்ளோமா என்றால் இல்லை. எங்களுடைய டீம் இல் எத்தனை நபர்கள் சென்றோம் என்றால் நான்கு நபர்கள். எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் இருச்சக்கர வாகனம். எத்தனை நபர்களை கைது செய்தோம் என்றால் 12 நபர்கள். எந்த வாகனத்தில் வைத்து காவல் நிலையம் அழைத்துச் சென்றோம் என்றால்

ஞாபகமில்லை. சம்பவ இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் அரை கிலோ மீட்டர் இருக்கும். எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் மதியம் சுமார் 2.30 மணி இருக்கும் . எதிரிகளை யாரிடம் ஒப்படைத்தோம் என்றால் ஆய்வாளரிடம். அப்போது பாரா பணியில் யார் இருந்தார்கள் என்றால் ஞாபகமில்லை. ஆய்வாளர் எத்தனை மணிக்கு எங்களை விசாரணைச் செய்தார் என்றால் 3 மணி இருக்கும். புகார்தாரர் யார் என்றால் சிறப்பு உதவி ஆய்வாளர் குமார். பொதுமக்களை ஏமாற்றும் நோக்குடன் செயல்பட்ட எதிரிகளுக்கு எதிராக என் தனி நபர் சாட்சி பெறவில்லை என்றால் நாங்கள் கேட்டோம் யாரும் முன்வரவில்லை. நான் எனது ஆய்வாளருக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கூறுவது போல் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றாலும் எதிரிகள் ஏமாற்றும் நோக்குடன் எந்த செயலும் செய்யவில்லை என்றாலும் எதிரிகள் மீது பொய்யாக இவ்வழக்கானது தொடரப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளிடம் இருந்து தடைசெய்யப்பட்ட எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் இருப்பில் உள்ள பொருட்களை தடய பொருட்கள் என பொய்யாக கூறுகிறோம் என்றால் சரியல்ல. எதிரிகள் யாரும் குற்ற சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.